788

# பூந்தமிழ் இலக்கணம்

— முதற் படிவம் —

[ I-ம் பிரிவுக்குரியது ]

*

26-6-51-ல் கல்வியிலாகா
வெளியிட்டுள்ள
புதிய பாட இயலைத் தழுவியது

*

OFFICE OF THE REGISTRAR ...
24 DEC ...
MADRAS

TG
P31(6)N51.
131168

...ங்கடராமன் கம்பெனி
கும்பகோணம்

# பூந்தமிழ் இலக்கணம்

—முதற் படிவம்—

[ I-ம் பிரிவுக்குரியது ]

[26-6-1951-ல் கல்வியிலாகா வெளியிட்டுள்ள திட்டப்படி
தாய்மொழிப் போதனையில் **முதற் பிரிவுக்குரிய**
இலக்கண பாட இயலைத் தழுவியது]

வித்துவான் **கோ. இரத்தினப் பிள்ளை**
*தமிழாசிரியர்*
*பொன்னையா உயர்நிலைப் பள்ளி : : திருச்சிராப்பள்ளி*

**V. S. வெங்கடராமன் கம்பெனி**
**பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்**

**உரிமைப் பதிவு ]** **[ விலை 8 அணா**

TB
P31(8)
N51

# முன்னுரை

**I, II, III**-ம் படிவ மாணவர்கள் கட்டாயப் பாடமாகப் படித்தறிவதற்கென்று கல்வி யிலாகா **26—6—1951**-ல் வெளியிட்டுள்ள புதிய பாட இயலைத் தழுவி, **பூந்தமிழ் இலக்கணம்** என்னும் இந்நூல் **முதற் படிவத்துக்கென** தயாரிக்கப்பெற்றதாகும்.

உதாரணங்களிலிருந்து இலக்கண விதிகளை வருவித்தலாகிய **அநுமான முறையில்** இந் நூல் எழுதப்பெற்றதாகும். ஆதலால், மாணவர்கள் இலக்கண அமைதிகளை இன்புடன் எளிதில் அறிந்துகொள்ள இயலும். அவர்கள் கற்றுக் கொண்ட இலக்கண அறிவை நிலைநிறுத்தும் பொருட்டு **வினக்களும், புதுமுறைப் பயிற்சிகளும்** ஒவ்வொரு இலக்கணப் பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

தமது நீண்ட காலப் போதன அநுபவங் கொண்டு இந்நூலைத் திறம்பட இயற்றியுதவிய **வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கட்கு எமது நன்றி உரியதாகும்.

தமிழுலகம் இந்நூலை ஏற்று ஆதரிக்க வேண்டுகிறோம்.

கும்பகோணம் } **V.S. வெங்கடராமன் கம்பெனி**
19—11—1951 } பப்ளிஷர்ஸ்

131168

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாக்கியம் | .... | 1 |
| II. | பெயர்ச்சொல் | .... | 8 |
| III. | வினைச்சொல் | .... | 27 |
| IV. | எழுத்து | .... | 35 |
| V. | புணர்ச்சி | .... | 51 |
| VI. | நிறுத்தற் குறிகள் | .... | 58 |

# பூந்தமிழ் இலக்கணம்

## முதற் புத்தகம்

[முதற் பகுதிக்குரியது]

தமிழ் நமது தாய்மொழி. தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல் தமிழ் இலக்கணம் ஆகும்.

### I. வாக்கியம்

மக்கள் தம் மனத்திற் தோன்றும் கருத்துக்களைப் பிறர்க்குத் தெரிவிக்கும்பொழுது பல சொற்களைக்கொண்டு பேசுகின்றனர்; எழுதிக் காட்டுகின்றனர். அவ்வாறு பேசவும் எழுதவும் பயன்படும் சொற்றொடர்களே **வாக்கியம்** எனப் படும். ஆகையால்,

**மக்கள் தமது கருத்தைப் பிறர் அறிந்துகொள்ளப் பேசுவதும் எழுதுவதும் ஆகிய சொற்றொடர்களே வாக்கியம் ஆகும். (சொற்றொடர் = சொல் + தொடர்)**

#### வாக்கியத்தின் பொது இலக்கணம்

நாம் நம் மனத்திற் தோன்றும் எண்ணங்களைப் பிறர் நன்கு தெரிந்துகொள்ளுதற்காகப் பல சொற்களை ஒன்றுசேர்த்து வழங்குகின்றோம் அல்லவா? அவ்வாறு சொற்களை வழங்கும்பொழுது அவை முடிந்த கருத்தைத் தெரிவித்தல்வேண்டும்.

தமிழ் நமது தாய்மொழி.
நாம் தமிழைப் படிக்கவேண்டும்.
மழை பெய்தால் நாடு செழிப்படையும்.

இச்சொற்றொடர்கள் நமக்கு ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கின்றன. இவையே வாக்கியங்கள் ஆகும்.

நமது தாய்மொழி
நாம் தமிழை
மழை பெய்தால் நாடு

இச்சொற்றொடர்களில் கருத்து செவ்வையாகப் புலப்படவில்லை. ஆதலால் இவை வாக்கியங்கள் ஆகா. ஆகையால்,

**பல சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிவான கருத்தை விளக்குவதே வாக்கியத்தின் பொது இலக்கணம் ஆகும்.**

உதாரணம்:

நான் தமிழ்ப் பாடம் படிக்கிறேன்.
நாங்கள் மதுரைக்குச் சென்றோம்.
நீ என்றும் நல்லவனாக இரு.
மயில் மேகத்தைக் கண்டு ஆடுகிறது.
கரிகாலன் காவிரிக்குக் கரைகள் அமைத்தான்.

குறிப்பு: வாக்கியம் முற்றுச் சொற்றொடர் என்றும் வழங்கப் பெறும். பொருள் முடிந்து நிற்பது முற்றுச் சொற்றொடர். ஆனால்,

மயில் மேகத்தைக் கண்டு —.
கரிகாலன் காவிரிக்கு —.

இச் சொற்றொடர்கள் பொருள் முற்றுப்பெறாமல் இருக்கின்றன. இவற்றை முடித்துக்காட்ட வேறு சொற்கள் வேண்டியிருக்கின்றன. ஆதலால் இவை எச்சச் சொற்றொடர் என வழங்கப் பெறும். (எச்சம் = குறைபாடு)

முருகன் பழனியில் கோயில் உண்டு.

இச்சொற்றொடர் எவ்விதமான பொருளையும் விளக்காமையால், இது வாக்கியம் ஆகாது.

பழனியில் முருகன் கோயில் உண்டு.

என்று சொற்களை ஏற்றவாறு அமைத்தால்தான் வாக்கியமாகும்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுள் வாக்கியத்தை மட்டும் கண்டுபிடித்து எழுதுக :—

1. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
2. பொருளைத் தேடிப் புகழையும் பெறுவாய்.
3. நாம் சுதந்திர நாட்டில்.
4. மானம் இழந்தபின் வாழ்வதும் ஒரு வாழ்வா!
5. விடாமுயற்சியால் வெற்றி
6. மாணவர்கள் பள்ளியில் கல்வி.

ஆ. பின் வரும் வாக்கியங்களை முடித்துக் காட்டுக :—

1. நான் பள்ளிக்கூடம் ——.
2. கண்ணன் இராட்டையில் ——.
3. வள்ளி, தேசிய கீதம் —— .
4. கடவுள் எங்கும் ——.
5. மக்கள் உயர மன்னனும் ——.
6. சூரியன் மாலையில் மேற்கில் ——.

இ. பின்வரும் தொடர்களில் உள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றி, வாக்கியங்கள் அமைத்துக் காட்டுக :

1. கோவலன் வாழ்ந்திருந்தான் நகரில் புகார்.
2. திருவள்ளுவர் நூல் இயற்றிய திருக்குறள்.
3. கந்தை கட்டு ஆனாலும் கசக்கி.
4. நீரில் நல்லது ஆற்று குளிப்பது.
5. காலை வணங்கு மாலை கடவுளை.
6. நன்றியுள்ள ஒரு நாய் பிராணி.

## வாக்கியத்தின் வகைகள்

பொன்னன் புத்தகம் வாங்கினான்.
வேலா! பள்ளிக்கூடம் செல்.
இப்பெட்டியை எங்கு வாங்கினாய்?
ஐயோ! கண் தெரியாத கிழவன்!

இவற்றுள் முதல் வாக்கியம், பொன்னன் செய்த செயலையும், இரண்டாவது வாக்கியம் ஒரு கட்டளையையும்

(உத்தரவையும்), மூன்ருவது வாக்கியம் வினப் பொருளை யும், கடைசி வாக்கியம் இரக்கத்தைக் காட்டும் உணர்ச்சி யையும் தெரிவிக்கின்றன. ஆதலால் வாக்கியங்கள் நான்கு வகைப்படும்.

அவை செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வின வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என்பனவாம்.

**செய்தி வாக்கியம்:** ஒன்றன் செய்தியினைத் தெரிவிப்பது செய்தி வாக்கியம் ஆகும்.

உ-ம். அம்பலவாணன் பாடம் படிக்கிருன்.
மாடுகள் வயலில் உழுகின்றன.
மணிவாசகம் மதுரைக்குச் செல்லவில்லை.
அமிர்தவல்லி இன்னும் வந்திலள்.

இவற்றுள் 'படிக்கிருன்' 'உழுகின்றன' என்ற சொற்கள் தொழில் நிகழ்ச்சியை அறிவிக்கின்றன. 'செல்லவில்லை', 'வந்திலள்' என்ற சொற்கள் தொழில் நிகழாமையைத் தெரிவிக்கின்றன.

**கட்டளை வாக்கியம்:** ஒன்றன் கட்டளையைத் தெரிவிப்பது கட்டளை வாக்கியம் ஆகும். (கட்டளை-உத்தரவு.)

உ-ம். சுந்தரா, நீ வெயிலில் விளையாடாதே.
திருவள்ளுவர் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.
நீ இப்புத்தகத்தை வாங்கு.
நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்.

இவற்றுள் 'விளையாடாதே', 'எழுதுக', 'வாங்கு', 'சொல்லவேண்டாம்' என்பவை கட்டளையை உணர்த்து கின்றன.

**வின வாக்கியம்:** ஒன்றன் வினப் பொருளைத் தெரிவிப்பது வின வாக்கியம் ஆகும்.

உ-ம். தஞ்சைக்கு வழி எது?
நீ நன்ருகப் பாடுவாயா?

இப்புத்தகம் என்ன விலை?
பழத்தைத் தின்றவன் யாவன்?

இவ்வாக்கியங்கள் வினைப் பொருளைத் தெரிவித்து நிற்றலை அறிக.

**உணர்ச்சி வாக்கியம்:** ஒருவர் மனத்தில் தோன்றும் உணர்ச்சியினைத் தெரிவிப்பது உணர்ச்சி வாக்கியம் ஆகும்.

உ-ம். ஐயோ! காந்தியார் நம்மைப் பிரிந்தாரே!
ஆ! ஆ! இப்பொருள் என்ன அழகு!
நான் உன்னை என்ன செய்கிறேன் பார்!
ஐயோ! பாம்பு பாம்பு! ஓடி வாருங்கள்!

இவ்வாக்கியங்கள் மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளைத் தெரிவித்து நிற்றலைக் காண்க.

பயிற்சி

**கீழ் வரும் வாக்கியங்கள் என்னென்ன வாக்கியங்கள் ஆகும்?—**

1. ஓடி விளையாடு பாப்பா.
2. பேகன் மயிலுக்குப் போர்வை அளித்தான்.
3. இப் பெட்டி உறுதியாக இருக்கிறது.
4. முல்லைக்குத் தேர் கொடுத்தவன் பாரி அல்லவா?
5. கந்தன் பள்ளிக்கூடம் வரவில்லை.
6. உள்ளதை இல்லையென்று சொல்லாதே.
7. மணி நன்றாகத் தேசிய கீதம் பாடினனா?
8. அவன் செய்தது என்ன அநியாயம்!

### வாக்கியத்தின் உறுப்புக்கள்

உழவன் நிலத்தை உழுதான்.

இஃது ஒரு வாக்கியம். இவ்வாக்கியத்தின் பொருள் முடிந்து நிற்கும் சொல் 'உழுதான்' என்பது. இதுவே இவ்வாக்கியத்தின் பயனிலை. உழுதல் தொழிலைச் செய்தவன் 'உழவன்'. இச்சொல் இவ்வாக்கியத்தின் கருத்தா (எழுவாய்) ஆகும். உழவாகிய தொழிலின் பயனை அடைந்து நிற்பது 'நிலம்' ஆகும். இச்சொல் இவ்வாக்யத்தின் செயப்படுபொருள் ஆகும்.

ஆகவே எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இம்மூன்றும் வாக்கியத்தின் உறுப்புக்களாம்.

**எழுவாய்:** ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது எழுவாய் ஆகும்.

உ-ம். இராமச்சந்திரன் சித்திரம் வரைகிறான்.
ஆலமரம் தழைத்து நிற்கின்றது.

இவ்வாக்கியங்களுள் 'வரைகிறான்', 'நிற்கின்றது' என்ற பொருள் முடிந்து நிற்கும் சொற்களுக்கு, 'இராமச் சந்திரன்', 'ஆலமரம்' என்பன எழுவாய்களாக நிற்றலை அறிக.

**குறிப்பு:** எழுவாய் = எழு + வாய்; தொழில் எழுகின்ற இடம். எழுவாய் சில இடங்களில் மறைந்து நிற்றலும் உண்டு. அது தோன்றா எழுவாய் எனப் பெயர்பெறும். உ-ம்: முத்து! ஓடி வா. இதில் நீ என்பது தோன்றா எழுவாய்.

**பயனிலை:** கருத்தா செய்யும் தொழிலைத் தெரிவிப்பது பயனிலை ஆகும்.

உ-ம். உழவன் நிலத்தை உழுகிறான்.
மரங்கள் செழித்து வளர்ந்தன.

இவ்வாக்கியங்களுள் 'உழவன்', 'மரங்கள்' என்ற கருத்தாக்களுக்கு 'உழுகிறான்', 'வளர்ந்தன' என்பன பயனிலைகளாக நிற்றலை அறிக.

**குறிப்பு:** பயனிலை = பயன் + நிலை; பயன் நிலைத்து நிற்கும் இடம். பெரும்பாலும் பயனிலை வினைமுற்றாகவே நிற்கும்; சிறுபான்மை பெயர்ச்சொல்லாகவும், வினாச்சொல்லாகவும் நிற்கும்.

உ-ம். வேலன் படித்தான்—வினைப் பயனிலை;
இது வரிக்குதிரை—பெயர்ப் பயனிலை;
வந்தவர் யார்—வினாப் பயனிலை.

**செயப்படுபொருள்:** கருத்தாவால் செய்யப்படும் தொழிலின் பயனை அடைந்து நிற்பது செயப்படுபொருள் ஆகும்.

உ-ம். கம்பர் இராமாயணத்தைப் பாடினார்.
குரங்கு தேங்காயைப் பறித்தது.

இவற்றுள் 'கம்பர்', 'குரங்கு' என்ற கருத்தாக்களால் செய்யப்படும் தொழிலின் பயனை அடைந்து நிற்பன 'இராமாயணம்', 'தேங்காய்' என்பனவாகும்.

**குறிப்பு:** செயப்படுபொருள் = செய + படு + பொருள்; எழுவாய் செய்தலை அடையும் பொருள். எந்த வாக்கியங்களும் எழுவாய், பயனிலைகளைப் பெற்றே வரும்; ஆனால், செயப்படு பொருள் இல்லாமலும் சில வாக்கியங்கள் வரும்.

உ-ம். அவன் வருகிறான்.
அங்கே போ.

பயனிலை வாக்கியத்தின் முடிவில் நிற்கும். பயனிலையோடு **யார்** அல்லது **எது** என்ற வினாக்களை அமைத்துக் கேட்டால் வரும் விடையே **எழுவாயாகும்**; அவ்வாறே பயனிலையோடு **யாரை** அல்லது **எதை** என்ற வினாக்களை அமைத்துக் கேட்டால் வரும் விடையே **செயப்படுபொருளாகும்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்துக் கட்டங்களில் அமைத்து எழுதுக:-**

1. குயில் மாஞ்சோலையில் கூவுகிறது.
2. கோவிந்தன் வீட்டைக் கட்டுகிறான்.
3. சிறுவர்கள் பந்து விளையாடுகிறார்கள்.
4. இவன் முதற் பரிசுபெற்ற பையன்.
5. நீ வாங்கிய புத்தகம் எது?

| எழுவாய் | பயனிலை | செயப்படு பொருள் |
|---|---|---|
| | | |

### வினாக்கள்

1. தமிழ் இலக்கணம் என்பது யாது?
2. வாக்கியத்தின் பொது இலக்கணத்தைக் குறிப்பிடுக.
3. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன? விளக்குக.
4. வாக்கியத்தில் நிற்கும் உறுப்புக்கள் யாவை?
5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—இவைகளைக் கண்டுபிடிக்கும் விதத்தினைத் தெரிவிக்க.

# II. பெயர்ச்சொல்

மனிதன், பறவை, ஆடு, முதலை,
புழு, மரம், செடி, கொடி.
கடல், மண், மலை, காற்று.

இச் சொற்கள் ஒவ்வொன்றின் பெயரைக் குறித்து நிற்கின்றன. ஆதலால்,

ஏதேனும் ஒன்றன் பெயரைக் குறித்து நிற்குஞ்சொல் பெயர்ச்சொல் ஆகும்.

குறிப்பு: மனிதன், பறவை முதலியன பெயர்ச் சொற்கள்; ஆனால் இவற்றால் குறிக்கப்படும் பொருள்கள் பெயர்ச்சொற்கள் ஆகா.

## அறுவகைப் பெயர்கள்

முருகன், திருவாரூர், புதன்கிழமை,
கண், வெண்மை, ஆடுதல்—

இவற்றுள் முருகன் என்ற பெயர் ஒரு பொருளையும், திருவாரூர் என்பது ஓர் இடத்தின் பெயரையும், புதன் கிழமை என்பது ஒரு காலத்தின் பெயரையும், கண் என்பது ஓர் உறுப்பின் (சினையின்) பெயரையும், வெண்மை என்பது ஒரு நிறத்தின் (குணத்தின்) பெயரையும், ஓடுதல் என்பது ஒரு தொழிலின் பெயரையும் குறித்து நிற்கின்றன. ஆதலால்

பெயர்ச் சொற்கள் பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறு வகைப்படும்.

பொருட் பெயர்: ஒரு பொருளின் பெயரைக் குறித்து நிற்குஞ் சொல் பொருட் பெயர் ஆகும்.

உ-ம். அமிர்தவல்லி ஓர் அழகான பெண்.
கண்ணன் குழல் ஊதுகிறான்.
பூக்களிற் சிறந்தது தாமரை மலர்.
மேகத்தைக் கண்டு மயில் ஆடுகிறது.

இவற்றுள் அமிர்தவல்லி, கண்ணன், குழல், தாமரை மலர், மயில் என்பன ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்றலை அறிக.

**இடப் பெயர்:** ஓர் இடத்தின் பெயரைக் குறித்து நிற்கும் சொல் இடப் பெயர் ஆகும்.

**உ-ம்.** **இந்தியா** நமது நாடு.

**உறையூர்** சோழ நாட்டின் தலைநகரம்.

**பூந்தோட்டம்** அழகாக இருக்கிறது.

இஃது எங்கள் **பள்ளிக்கூடம்.**

இவற்றுள் இந்தியா, உறையூர், பூந்தோட்டம், பள்ளிக்கூடம் என்பன ஒவ்வொரு இடத்தைக் குறித்து நிற்றலை அறிக.

**காலப் பெயர்:** ஒரு காலத்தின் பெயரைக் குறித்து நிற்கும் சொல் காலப் பெயர் ஆகும்.

**உ-ம்.** **விரோதி** என்பது ஒரு நல்ல ஆண்டு.

**சித்திரை** மாதத்தில் வெப்பம் அதிகம்.

**திங்கட்கிழமை** சிறந்த நாள்.

**காலை மாலை** கடவுளைத் தொழு.

இவற்றுள் விரோதி, சித்திரை, திங்கட்கிழமை, காலை, மாலை என்பன முறையே ஆண்டு, மாதம், கிழமை, பொழுது ஆகிய கால அளவுகளைக் குறித்து நிற்றலை அறிக.

**சினைப் பெயர்:** ஒரு சினையின் (உறுப்பின்) பெயரைக் குறித்து நிற்குஞ் சொல் சினைப் பெயர் ஆகும்.

உ-ம். **கை** கட்டிப் பிழைத்தல் இழிவாகும்.
பசுவின் **வால்** குஞ்சம்போல் இருக்கும்.
வாழை **இலை** உண்கலமாகும்.
தென்னை மரத்திற்கு ஆணி **வேர்** இல்லை.

இவற்றுள் கை, வால், இலை, வேர் என்பன ஒவ்வொரு சினையை (உறுப்புக்களை)க் குறித்து நிற்றலை அறிக.

**பண்புப் பெயர்:** ஒரு பண்பின் (குணத்தின்) பெயரைக் குறித்து நிற்குஞ் சொல் பண்புப் பெயர் ஆகும்.

உ-ம். காக்கை **கருமை** நிறம்.
பாகற்காய் **கசப்பாய்** இருக்கும்.
தாமரைக் குளத்தின் நீர் **குளிர்ச்சி.**
**நன்மை** கடைப்பிடி ; **தீமை** அகற்று.

இவற்றுள் கருமை, கசப்பு, குளிர்ச்சி, நன்மை, தீமை என்பன ஒவ்வொரு பண்பின் (குணத்தின்) பெயரைக் குறித்து நிற்றலை அறிக.

**தொழிற் பெயர்:** ஒரு தொழிலின் பெயரைக் குறித்து நிற்குஞ் சொல் தொழிற் பெயர் ஆகும்.

உ-ம். அதிகாலையில் **எழுதல்** மிகவும் நன்று.
காவிரியில் நீர் **ஓட்டம்** அதிகம்.
கமலம் **ஆடல் பாடல்**களில் வல்லவள்.
**வரவு**க்கு மிஞ்சிச் **செலவு** செய்யாதே.

இவற்றுள் எழுதல், ஓட்டம், ஆடல், பாடல், வரவு, செலவு முதலியன ஒவ்வொரு தொழிலின் பெயரைக் குறித்து நிற்றலை அறிக.

குறிப்பு : **தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, பாடு, காடு** முதலிய விகுதிகளுள் ஒன்றைப் பெற்றே பெரும்பாலும் தொழிற் பெயர் வரும்.

உ-ம். நடத்**தல்**, உண்**ணல்**, ஆட்**டம்**, கொலை, வரு**கை**, பார்**வை**, போக்**கு**, நட்**பு**, வரவு, மற**தி**, மகிழ்ச்**சி**, கல்**வி**, கோட்**பாடு**, சாக்**காடு**.

### பயிற்சி

**பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களைக் கீழேயுள்ள கட்டங்களில் அமைத்து எழுதுக:—**

1 கந்தன் கடைக்குச் சென்று பந்து வாங்கினான்.
2. மயில் தோகையை விரித்து அழகாய் ஆடும்.
3. நல்லோர் வரவு நன்மையைத் தரும்.
4. தெருவில் கூட்டங்கூடி நிற்காதே.
5. மாலையில் உலவுதல் மனத்திற்கு மகிழ்ச்சி.
6. தையும் மாசியும் வையகத்து உறங்கு.
7. சந்திரன் குளிர்ச்சியைத் தருகிறான்.
8. நடராசன் பாட்டு இனிமை பொருந்தியது.
9. பாரதியார் பாடல் உணர்ச்சியை எழுப்பும்.
10. பனையோலை பாய் பின்ன உதவும்.

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | பண்புப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

பெயர்ச்சொல் **திணை, பால், எண், இடம், வேற்றுமை** ஆகிய இவ்வைந்தையும் காட்டி நிற்கும்.

### திணை

கோவலன், கண்ணகி, திருமால், இலட்சுமி, பசு, பாம்பு, செடி, கல், மணி—

இவற்றுள் கோவலன், கண்ணகி என்பன மக்கட் பெயர்களையும், திருமால், இலட்சுமி என்பன தேவர்கள் பெயர்களையும், பசு, பாம்பு, செடி என்பன மக்கள் தேவர்கள் அல்லாத பிற உயிருள்ள பொருள்களையும்,

கல், மணி என்பன உயிரற்ற பொருள்களையும் குறித்து நிற்கின்றன. மக்கள் தேவர் பெயர்களை உயர்ந்த குலமாகவும், மற்ற உயிருள்ள, உயிரற்ற பொருள்களை உயர் வல்லாத குலமாகவும் கூறப்பெறும். ஆதலால்,

உலகத்துப் பொருள்கள் எல்லாம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவு திணை என்று வழங்கப்பெறும். (திணை—குலம்; வகுப்பு)

**திணை உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும்.**

குறிப்பு: உயர்திணை — உயர்வாகிய திணை; அஃறிணை— அல்+திணை; உயர்வு அல்லாத திணை.

**உயர்திணை: மக்களும் தேவர்களும் உயர்திணை ஆகும்.**

உ-ம். இளங்கோ, இராசராசன், மணிமேகலை—மக்கள்.
சிவன், இந்திரன், கலைமகள்—தேவர்.

குறிப்பு: நரகரும் உயர்திணையாவர். நரகர்—கீழுலகவாசிகள்.

உ-ம். ஆதிசேடன், கார்க்கோடகன்.

**அஃறிணை: உயர்திணையல்லாத மற்ற உயிர் உள்ள பொருள்கள், உயிர் இல்லாத பொருள்கள் ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணை ஆகும்.**

உ-ம். பசு, கிளி, பாம்பு, புழு, தென்னை—உயிர் உள்ள பொருள்கள்.

கல், மண், நீர், நெருப்பு, காற்று, வானம், நாற்காலி, புத்தகம்—உயிர் இல்லாத பொருள்கள்.

குறிப்பு: கடவுள் இருக்கிறார்—கடவுள் இருக்கிறது.
சூரியன் உதித்தான்—சூரியன் உதித்தது.
கார்க்கோடகன் தீண்டினான்—கார்க்கோடகன் தீண்டிற்று—எனக் கடவுள், நரகர் பெயர்கள் இரு திணைகளிலும் அமைந்து வருதலும் உண்டு.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கீழ்வரும் கட்டங்களில் அமைத்து எழுதுக :-**

1. கோவலன் கண்ணகியை மணந்தான்.
2. சேரன் செங்குட்டுவன் சிறந்த வீரன்.
3. கீரியும் பாம்பும் சண்டையிட்டன.
4. கிழவன் தள்ளாடி நடக்கிறான்.
5. சிங்கம் காட்டில் வாழும் மிருகம்.
6. தேவேந்திரன் வானவர்கட்கு அரசன்.
7. கலைமகள் கல்விக்கு அரசி.
8. செடி கொடிகள் தழைத்து வளருகின்றன.
9. வண்டு தேனை யுண்டு பாடுகிறது.
10. இராசராசன் தஞ்சைக் கோயிலைக் கட்டினான்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

### பால்

இராமன், சீதை, மனிதர்கள்,
புலி, மரங்கள் —

இவற்றுள் இராமன் என்ற சொல் ஒரு ஆண்மகனைக் குறிக்கிறது; ஆகையால் **ஆண்பால்**. சீதை என்ற சொல்

ஒரு பெண்மகளைக் குறிக்கிறது; ஆகையால் **பெண்பால்.** மனிதர்கள் என்ற சொல் பல மனிதர்களைக் குறிக்கிறது; ஆகையால் **பலர்பால்.** புலி என்ற சொல் அஃறிணையில் ஒரு பொருளைக் குறிக்கிறது; ஆகையால் **ஒன்றன்பால்.** மரங்கள் என்ற சொல் அஃறிணையில் பல பொருளைக் குறிக்கின்றது; ஆகையால் **பலவின்பால்.**

இவ்வாறு திணையின் உட்பிரிவு பால் என்று வழங்கப்பெறும் (பால்—பகுப்பு, பிரிவு).

பால் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப் படும்.

குறிப்பு : ஆண்பால், பெண்பால், பலர்பால், இம்மூன்றும் உயர்திணைக்குரியன; ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் அஃறிணைக்குரியன.

ஆண்பால் : உயர்திணையில் ஒரு ஆணைக் குறித்து நிற்குஞ் சொல் ஆண்பால் ஆகும்.

உ-ம். கோவலன், அரசன், கிழவன், சிறுவன்.

பெண்பால் : உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறித்து நிற்குஞ் சொல் பெண்பால் ஆகும்.

உ-ம். சீதை, அரசி, கிழத்தி, சிறுமி.

பலர்பால் : உயர்திணையில் பலரைக் குறித்து நிற்குஞ் சொல் பலர்பால் ஆகும்.

உ-ம். மக்கள், அரசர்கள், கிழவர்கள், சிறுமிகள்.

குறிப்பு : உயர்திணையில் ஆணாயினும், பெண்ணாயினும், இவ்விருவர் கலந்தாயினும், ஒருவருக்கு மேற்பட்டவர் பலர்பாலே யாவர்.

ஒன்றன்பால் : அஃறிணையில் ஒரு பொருளைக் குறித்து நிற்குஞ் சொல் ஒன்றன்பால் ஆகும்.

**உ-ம்.** பசு, புறு, சேவல், புத்தகம்.

**குறிப்பு:** அஃறிணையில் சில உயிருள்ள பொருள்களுக்கு ஆண், பெண் என்ற பிரிவு இருந்தாலும், அவை ஆண்பால், பெண்பால் என வழங்கப்படுவது இல்லை.

பலவின்பால்: அஃறிணையில் பல பொருளைக் குறித்து நிற்குஞ் சொல் பலவின்பால் ஆகும்.

**உ-ம்.** மாடுகள், கோழிகள், மலைகள், மரங்கள்.

### பயிற்சி

**பின் வரும் வாக்கியங்களில் உள்ள ஐம்பாற் பெயர்களைக் கீழுள்ள கட்டங்களில் அமைத்து எழுதுக:**

1. சிறுவர்கள் தெருவில் விளையாடுகின்றனர்.
2. கந்தன் பசுமாடு வாங்கினான்.
3. வள்ளி மாம்பழம் விற்கிறாள்.
4. ஆலமரம் குளிர்ந்த நிழலைத் தரும்.
5. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
6. பெட்டைக் கோழி முட்டை இடும்.
7. குழந்தைகள் ஆடிப் பாடி விளையாடுகின்றனர்.
8. எறும்புகள் சாரை சாரையாகச் செல்லுகின்றன.
9. வரதன் பாடம் படிக்கிறான்.
10. பெற்றோரை வணங்குதல் பிள்ளைகட்கு அழகு.

| ஆண் பால் | பெண் பால் | பலர் பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
|---|---|---|---|---|
| | | | | |

## எண்

மாணவன் — மாணவர்கள்
புத்தகம்—புத்தகங்கள்

இவற்றுள் மாணவன், புத்தகம் என்பன ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றன; ஆதலால் **ஒருமை எண்** ஆகும். **மாணவர்கள்**, புத்தகங்கள் என்பன பல பொருள்களைக் குறிக்கின்றன; ஆதலால் **பன்மை எண்** ஆகும்.

இவ்வாறு பொருளின் எண்ணிக்கையினைத் தெரிவிப்பது **எண்** ஆகும்.

**எண் ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.**

**ஒருமை**: பொருள்களுள் ஒன்றைக் குறிக்குஞ் சொல் ஒருமை ஆகும்.

**உ-ம்.** சிறுவன், விலங்கு, மரம், கல்.

**பன்மை**: பொருள்களுள் பலவற்றைக் குறிக்குஞ் சொல் பன்மை ஆகும்.

**உ-ம்.** சிறுவர்கள், விலங்குகள், மரங்கள், கற்கள்.

**குறிப்பு:** ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை எண்ணை உணர்த்தும்; பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மை எண்ணை உணர்த்தும்.

### பயிற்சி

**பின் வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமை, பன்மைச் சொற்களை எடுத்து எழுதுக:—**

1. கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்தாள்.
2. மாடுகள் வயலில் மேய்கின்றன.
3. ஆமை முயலை வென்றது.
4. பிராணிகளிடம் அன்பாக இரு.
5. பிள்ளைகள பெற்றோரைப் பணிதல்வேண்டும்.
6. கந்தன் வள்ளியை மணந்தான்.
7. அமிர்தவல்லி பெண்களில் சிறந்தவள்.
8. மணிவாசகன் பிள்ளைகளுடன் விளையாடுகிறான்.
9. மன்னவன் மக்களை ஆதரித்தல்வேண்டும்.
10. நதிகளில் சிறந்தது காவிரி ஆகும்.

## இடம்

நானும் நீயும் சென்று வேலனைக் காண்போம்.

இத்தொடரில் நான் என்பது பேசுகின்றவனையும், நீ என்பது முன்னால் நிற்பவனையும், வேலன் என்பது அவ்விருவர் அல்லாத வேறொருவரையும் குறிக்கின்றன. ஆதலால்,

சொற்கள் வழங்கிவரும் இடத்தைக் குறிப்பது இடம் ஆகும்.

அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

**தன்மை இடம்:** பேசுவோனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் குறித்து நிற்குஞ் சொல் தன்மை இடம் ஆகும்.

**உ-ம்.** யான், நான்—தன்மை ஒருமை.
யாம், நாம், யாங்கள், நாங்கள்—தன்மைப் பன்மை.

**முன்னிலை இடம்:** பேசக் கேட்போனையும், அவனைச் சார்ந்தோரையும் குறித்து நிற்குஞ் சொல் முன்னிலை இடம் ஆகும்.

**உ-ம்.** நீ—முன்னிலை ஒருமை.
நீர், நீவிர், நீயிர், நீங்கள்—முன்னிலைப் பன்மை.

**குறிப்பு:** தன்மை, முன்னிலை இடங்கள் ஒருமை பன்மைகளை உணர்த்துமேயன்றித் திணை பால்களை உணர்த்தமாட்டா.

**படர்க்கை இடம்:** தன்மை, முன்னிலை அல்லாத மற்ற எல்லாப் பொருள்களையும் குறித்து நிற்குஞ் சொல் படர்க்கை இடம் ஆகும்.

**உ-ம்.** அவன், அவள், அது, பறவை — படர்க்கை ஒருமை.

அவர்கள், அவைகள், பறவைகள் —
படர்க்கைப் பன்மை.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள மூவிடச் சொற்களைக் கீழ்வரும் கட்டங்களில் அமைத்து எழுதுக:—**

1. நான் திருவாசகம் படிக்கிறேன்.
2. நீ எப்பொழுது மதுரைக்குச் சென்றாய்?
3. கண்ணன் குழல் ஊதுகின்றான்.
4. அவன் ஒரு நல்ல பையன்.
5. நாங்கள் அவர்களுடன் பந்து விளையாடினோம்.
6. நானும் நீயும் கந்தனுடன் தஞ்சை செல்வோம்.
7. நீங்கள் ஏன் போக வேண்டும்?
8. நீர் என்னை என்ன கேட்கின்றீர்?
9. மரங்கள் சோலையில் அடர்ந்திருக்கின்றன.
10. பறவைகள் கூட்டமாக வாழ்கின்றன.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |

**திணை**

- உயர்திணை
  - ஆண்பால்
  - பெண்பால்
  - பலர்பால்
- அஃறிணை
  - ஒன்றன்பால்
  - பலவின்பால்

**எண்**

- ஒருமை
  - ஆண்பால்
  - பெண்பால்
  - ஒன்றன்பால்
- பன்மை
  - பலர்பால்
  - பலவின்பால்

## வினாக்கள்

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? உதாரணம் தருக.
2. அறுவகைப் பெயர்களை உதாரணத்துடன் எழுதுக.
3. தமிழ்நாடு, குளிர்ச்சி, வற்றல், பொன்னன், உச்சிப்பொழுது, தலை—இவை என்னென்ன பெயர்கள்?
4. திணை எத்தனை வகைப்படும்? என்னென்ன? உதாரணம் காட்டுக.
5. கடவுளை எத்திணையில் அமைத்துக் கூறலாம்?
6. உயர்திணை, அஃறிணை—பொருள் எழுதுக.
7. ஒருமை, பன்மைக்குரிய பால்களும், உயர்திணை அஃறிணைக்குரிய பால்களும் யாவை?
8. மூவகை இடங்களையும் விளக்குக.
9. தன்மை, முன்னிலைப் பெயர்கள் எவற்றைக் காட்டும்?
10. திணை, பால், எண் இம்மூன்றையும் காட்டும் இடம் யாது?

## வேற்றுமை

கந்தன் அடித்தான்.
கந்தனை அடித்தான்.

இவை வாக்கியங்கள் ஆகும். இவ்விரண்டிலும் கந்தன் என்ற பெயர்ச்சொல் வந்துள்ளது. முதல் வாக்கியத்தில் அடித்தலாகிய தொழிலைச் செய்பவன் கந்தன். ஆகையால் கந்தன் என்பது எழுவாய்ப் பொருளில் வந்தது. இரண்டாவதில் அடித்தலாகிய தொழிலை அடையும் பொருளாக இருப்பவன் கந்தன். ஆகையால் கந்தனை என்பது செயப்படுபொருளில் வந்தது. இவ்வாறு,

**பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை யாகும்.**

பெயர்ச்சொல்லோடு கூடிநின்று பொருளை வேறுபடுத்திக் காட்டும் சொற்கள் வேற்றுமை உருபு எனப்படும்.

வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

**முதல் வேற்றுமை:** எவ்விதமான மாறுபாட்டையும் அடையாமல் இயல்பாக நிற்கும் பெயர்ச்சொல்லே முதல் வேற்றுமை ஆகும். இதற்குத் தனியாக உருபுகள் இல்லை.

**உ-ம்.** **கண்ணம்மாள்** கோலம் போடுகிறாள்.
**செங்குட்டுவன்** கண்ணகிக்குக் கோயில் கட்டினான்.
**மாடு** புல்லை மேய்ந்தது.
**மரங்கள்** செழித்து வளர்ந்தன.

இவற்றில் **கண்ணம்மாள்** முதலிய பெயர்ச்சொற்கள் எவ்வித மாறுபாடுகளையும் அடையாமல் நிற்றலால், இவை முதல் வேற்றுமையாம்.

குறிப்பு: முதல் வேற்றுமைச் சொல்லே ஒரு வாக்கியத்தில் எழுவாயாக வரும். ஆகையால், அஃது **எழுவாய் வேற்றுமை** என்றும் வழங்கப்பெறும்.

**இரண்டாம் வேற்றுமை:** இரண்டாம் வேற்றுமைக்கு 'ஐ' என்பது உருபாகும்.

**உ-ம்.** கண்ணன் **மாடுகளை** மேய்த்தான்.
அரசன் நாட்டை ஆளுகிறான்.
சிங்கம் **யானையைக்** கொன்றது.
உழவன் **வயலை** உழுகின்றான்.

இவற்றுள் மாடுகள், நாடு, யானை, வயல் என்ற பெயர்ச்சொற்கள் ஐ என்ற உருபை ஏற்று **இரண்டாம் வேற்றுமை** ஆயின.

குறிப்பு: இரண்டாம் வேற்றுமைச் சொல்லே ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளாக வரும். ஆகையால், அது **செயப்படு பொருள் வேற்றுமை** என்றும் வழங்கப்பெறும்.

**மூன்றாம் வேற்றுமை:** மூன்றாம் வேற்றுமைக்கு 'ஆல், ஆன், ஒடு, ஓடு' என்பன உருபுகளாகும். கொண்டு, உடன் என்பவையும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாக வரும்.

**உ-ம்.** **கண்ணாடியால்** வளையல் செய்யப்பட்டது.
**அறத்தான்** வருவதே இன்பம்.
**தந்தையோடு** மகனும் வந்தான்.
**கோவலனுடன்** கண்ணகியும் மதுரை சென்றாள்.

இவற்றுள் கண்ணாடி முதலிய பெயர்ச்சொற்கள் **ஆல், ஆன், ஒடு, உடன்** முதலிய உருபுகளை ஏற்று மூன்றாம் **வேற்றுமை ஆயின.**

**நான்காம் வேற்றுமை:** நான்காம் வேற்றுமைக்கு 'கு' என்பது உருபு ஆகும். ஆக, பொருட்டு, நிமித்தம் என்பவையும் நான்காம் வேற்றுமை உருபுகளாக வரும்.

உ-ம். **கூழுக்குப்** பாடியவர் ஔவையார்.
**வளையலுக்காகப்** பொன் வாங்கினான்.
**வேலையின் பொருட்டு** அலைந்து திரிந்தான்.
**தொழில் நிமித்தம்** சென்னை சென்றேன்.

இவற்றுள் கூழ் முதலிய பெயர்ச்சொற்கள் கு, **ஆக**, பொருட்டு, **நிமித்தம்** முதலிய உருபுகளை ஏற்று நான்காம் வேற்றுமை ஆயின.

**ஐந்தாம் வேற்றுமை:** ஐந்தாம் வேற்றுமைக்கு 'இல், இன்' என்பன உருபுகளாகும். நின்று, இருந்து என்பவையும் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாக வரும்.

உ-ம். **விலங்குகளில்** பெரியது யானை.
**முருகனின்** வேலன் பெரியவன்.
**எள்ளினின்றும்** எண்ணெய் எடுக்கலாம்.
**பெட்டியிலிருந்து** பணத்தை எடுத்தான்.

இவற்றுள் விலங்குகள் முதலிய பெயர்ச்சொற்கள் **இல், இன், நின்று, இருந்து** முதலிய உருபுகளை ஏற்று ஐந்தாம் வேற்றுமை ஆயின.

**ஆறும் வேற்றுமை:** ஆறும் வேற்றுமைக்கு 'அது' என்பது உருபாகும். உடைய என்பதும் ஆறும் வேற்றுமை உருபாக வரும்.

உ-ம். **வள்ளுவரது** நூல் திருக்குறள்.
**நமது** நாடு தமிழ் நாடு.
**முருகனுடைய** ஊர் பழனி.
**கோவலனுடைய** வரலாறு சிலப்பதிகாரம்.

இவற்றுள் வள்ளுவர் முதலிய பெயர்ச் சொற்கள் **அது, உடைய** என்ற உருபுகளை ஏற்று ஆறும் வேற்றுமை ஆயின.

**ஏழாம் வேற்றுமை:** ஏழாம் வேற்றுமைக்கு 'இல், கண், இடம்' முதலியன உருபுகள் ஆகும்.

உ-ம். **பெட்டியில்** பணம் இருக்கிறது.
**சபையின்கண்** ஏறிப் பேசப் பழகு.
**குழந்தைகளிடம்** அன்பாக இரு.
**மரத்தின்மேல்** ஏறினன்.

இவற்றுள் பெட்டி முதலிய பெயர்ச்சொற்கள் **இல், கண், இடம், மேல்** என்ற உருபுகளை ஏற்று ஏழாம் வேற்றுமை ஆயின.

**எட்டாம் வேற்றுமை:** எட்டாம் வேற்றுமைக்குத் தனியே உருபுகள் இல்லை. பெயர்ச்சொல்லின் ஈறு திரிதல், ஈற்றில் ஏகாரம் மிகுதல், ஈறு கெடுதல், ஈறு கெட்டு அயல் எழுத்துத் திரிதல், இயல்பாக நிற்றல் முதலிய வேறுபாடுகளைப் பெற்று வரும். (ஈறு—கடைசி; திரிதல்—மாறுபடுதல்).

உ-ம். **தம்பீ!** நீயே ஆண்களில் சிறந்தவன் — தம்பி என்பதன் ஈற்றில் உள்ள இ, ஈ எனத் திரிந்தது.

**மகனே!** உன் கடமையைச் செய் — மகன் என்பதன் ஈற்றில் ஏ மிகுந்து வந்தது.

**நண்ப!** எனக்கு ஒரு புத்தகம் கொடு — நண்பன் என்பதன் ஈற்றெழுத்து கெட்டது.

**சுந்தரா!** எழுந்து வா — சுந்தரன் என்பதன் ஈற்றெழுத்து கெட்டு அயலெழுத்துத் திரிந்தது.

**பிள்ளைகாள்!** நீங்களே வருங்காலச் செல்வங்கள் — பிள்ளைகள் என்பதன் ஈற்று அயலெழுத்துத் திரிந்தது.

**முருகன்!** நன்று உன் செய்கை — முருகன் என்பது இயல்பாக நின்றது.

குறிப்பு: எட்டாம் வேற்றுமை, படர்க்கை இடத்தில் இருப்பவைகளை நேர்முகமாக விளிப்பதாகும். ஆகையால் **அது விளி வேற்றுமை** என்றும் வழங்கப் பெறும். (விளித்தல்-அழைத்தல்)

தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் எட்டாம் வேற்றுமையை ஏற்று வரமாட்டா.

## தன்மை முன்னிலைப் பெயர்கள் உருபேற்றல்

தன்மைப் பெயர்களாகிய 'யான்', 'யாம்', 'நாம்' என்ற பெயர்களும், முன்னிலைப்பெயர்களாகிய, 'நீ', 'நீர்' என்ற பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும்போது தம் உருவத்தில் திரிந்து வரும்.

குறிப்பு: 'நான்' என்னும் தன்மைப் பெயரும், 'நீயிர்', 'நீவிர்' என்ற முன்னிலைப் பெயர்களும் முதல் வேற்றுமையில் மட்டும் வரும்.

'தான்', 'தாம்' என்ற பொதுப் பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது தம் உருவம் திரிந்துவரும்.

'யான்' என்னும் தன்மைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது 'என்' எனத் திரிந்து வரும்.

1. யான் 2. என்னை 3. என்னால் 4. எனக்கு
5. என்னின் 6. எனது 7. என்னிடம் 8. —

'யாம்' 'நாம்' என்னும் தன்மைப்பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது முறையே 'எம்' எனவும், 'நம்' எனவும் திரிந்து வரும்.

1. யாம் 2. எம்மை 3. எம்மால் 4. எமக்கு
5. எம்மின் 6. எமது 7. எம்மிடம் 8. —

1. நாம் 2. நம்மை 3. நம்மால் 4. நமக்கு
5. நம்மின் 6. நமது 7. நம்மிடம் 8. —

'நீ' என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது 'நின்' அல்லது 'உன்' எனத் திரிந்து வரும்.

1. நீ 2. நின்னை 3. நின்னால் 4. நினக்கு
5. நின்னின் 6. நினது 7. நின்னிடம் 8. —

1. நீ 2. உன்னை 3. உன்னால் 4. உனக்கு
5. உன்னின் 6. உனது 7. உன்னிடம் 8. —

'நீர்' என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபை ஏற்கும்போது 'நும்' அல்லது 'உம்' எனத் திரிந்து வரும்.

1. நீர் 2. நும்மை 3. நும்மால் 4. நுமக்கு
5. நும்மின் 6. நுமது 7. நும்மிடம் 8. —

1. நீர் 2. உம்மை 3. உம்மால் 4. உமக்கு
5. உம்மின் 6. உமது 7. உம்மிடம் 8. —

'தான்' 'தாம்' என்னும் பொதுப்பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது முறையே, 'தன்' எனவும், 'தம்' எனவும் திரிந்து வரும்.

1. தான் 2. தன்னை 3. தன்னால் 4. தனக்கு
5. தன்னின் 6. தனது 7. தன்னிடம் 8. —

1. தாம் 2. தம்மை 3. தம்மால் 4. தமக்கு
5. தம்மின் 6. தமது 7. தம்மிடம் 8. —

## பயிற்சி

**பின் வரும் வாக்கியங்களில் வந்துள்ள வேற்றுமைகளை எடுத்து எழுதுக :—**

1. வேலன் வேகமாய் ஓடுகிறான்.
2. ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகை யாகும்.
3. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.
4. முருகா ! கோடரியால் மரத்தை வெட்டு.
5. நான் கந்தனோடு சென்னையை அடைந்தேன்.
6. பந்தை வாங்கக் கடைக்குச் சென்றான்.
7. கல்வியில் பெரியவர் கம்பர்.
8. பூனை தனது குட்டியை வாயால் கௌவியது.
9. நண்ப ! என் தந்தையைக் கண்டாயா ?
10. தங்கம்மாள் நடராசனை மணந்தாள்.

## வினாக்கள்

1. வேற்றுமை என்பது என்ன ? அஃது எத்தனை வகைப்படும்?
2. மூன்றும், ஐந்தாம், ஆறும், ஏழாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
3. எட்டாம் வேற்றுமை எவ்வாறு வரும் ?
4. விளி வேற்றுமையை ஏற்காத பெயர்கள் என்னென்ன ?
5. வேற்றுமை ஏற்று வரும்போது திரியும் பெயர்களைக் குறிப்பிடுக.
6. முதல் வேற்றுமையை மட்டும் பெற்று வரும் பெயர்களை எழுதுக.
7. யான், நீ, தாம் — இப்பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது எவ்வாறு திரிந்துவரும்?

# III. வினைச்சொல்

மழை பெய்கிறது.

வேலன் வந்தான்.

நாடு செழித்தது.

வள்ளி பாடுகிறாள்.

இவற்றுள் பெய்கிறது, வந்தான், செழித்தது, பாடுகிறாள் என்பன மழை முதலியவற்றின் தொழிலை உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு தொழிலைக் குறித்து நிற்கும் சொல் வினைச்சொல் எனப்படும். ஆதலால்,

**ஒரு பொருளின் தொழிலைக் குறித்து நிற்கும் சொல் வினைச் சொல் ஆகும். (வினை — தொழில்)**

குறிப்பு : வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம் இவற்றோடு காலத்தையும் காட்டி நிற்கும். உதாரணமாக வந்தான் என்ற வினைச்சொல் உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம் என்றவற்றைக் காட்டுதலோடு, இறந்த காலத்தையும் காட்டி நிற்றலை அறிக.

## காலம்

இராமன் உண்டான்.
இராமன் உண்கிறான்.
இராமன் உண்பான்.

இவற்றுள் உண்டான் என்பது தொழில் முன்னமே நடந்து விட்டது என்பதையும், உண்கிறான் என்பது தொழில் இப்பொழுது நடக்கிறது என்பதையும், உண்பான் என்பது தொழில் இனி நடக்கப்போகிறது என்பதையும் உணர்த்துகின்றன. ஆகையால்,

**ஒரு தொழிலின் நிகழ்ச்சி எப்பொழுது என்பதைக் குறிப்பது காலம் ஆகும்.**

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூவகைப்படும்.

**குறிப்பு :** பெரும்பாலும் இடை நிலைகளால் காலத்தை அறியலாம். இடை நிலை — சொற்களின் இடையில் நிற்கும் ஓர் உறுப்பாகும்.

**இறந்த காலம் :** தொழில் முன்னமே நடந்து விட்டது என்பதைக் குறிப்பது இறந்தகாலம் ஆகும்.

இறந்த காலத்தைக் காட்டும் இடை நிலைகள் **த், ட், ற், இன்** என்பனவாம்.

| | | |
|---|---|---|
| **உ-ம்.** | செய்தான் | [ செய் + த் + ஆன் ] |
| | உண்டான் | [ உண் + ட் + ஆன் ] |
| | தின்றான் | [ தின் + ற் + ஆன் ] |
| | ஆடினான் | [ ஆடு + இன் + ஆன் ] |

**நிகழ் காலம் :** தொழில் இப்பொழுது நடக்கின்றது என்பதைக் குறிப்பது நிகழ்காலம் ஆகும்.

நிகழ் காலத்தைக் காட்டும் இடை நிலைகள் **கிறு, கின்று** என்பனவாம்.

| | | |
|---|---|---|
| **உ-ம்.** | எழுதுகிறான் | [ எழுது + **கிறு** + ஆன் ] |
| | பேசுகின்றான் | [ பேசு + **கின்று** + ஆன் ] |

**எதிர் காலம் :** தொழில் இனிமேல் நடக்கும் என்பதைக் குறிப்பது எதிர்காலம் ஆகும்.

எதிர் காலத்தைக் காட்டும் இடை நிலைகள் **ப், வ்** என்பனவாம்.

| | | |
|---|---|---|
| **உ-ம்.** | தின்பான் | [ தின் + ப் + ஆன் ] |
| | செல்வான் | [ செல் + வ் + ஆன் ] |

### பயிற்சி

பின் வரும் வாக்கியங்களில் உள்ள மூன்று கால வினைச் சொற்களைக் கீழ் உள்ள கட்டங்களில் அமைத்து எழுதுக:—

1. மழை சோவென்று பெய்தது.
2. மயில் அழகாக ஆடுகிறது.
3. கண்ணகி சிலம்பை உடைத்தாள்.
4. மணியன் மலைமேல் ஏறுவான்.
5. உழவன் ஓயாது உழைக்கிறான்.
6. சிறுவர்கள் பள்ளிக்குச் சென்றார்கள்.
7. இராமன் நன்றாகப் படிப்பான்.
8. நாங்கள் பாற்சோறு உண்டோம்.
9. நான் வீட்டிலிருந்து வந்தேன்.
10. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | | |

## முற்றுவினை

வேலன் **வந்தான்.**

முருகன் **சென்றான்.**

இவற்றுள் **வந்தான், சென்றான்** என்ற வினைச்சொற்கள் வேறு ஒரு சொல்லை வேண்டாமலேயே பொருள்முடிந்து நிற்கின்றன. இவை முற்று வினை எனப்படும். ஆதலால்,

**பொருள் முடிவு பெற்று நிற்கும் வினைச்சொல் முற்றுவினை ஆகும்.**

**குறிப்பு:** முற்றுவினை **வினைமுற்று** என்றும் வழங்கப்பெறும்.

வினைமுற்று தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று என மூன்று வகைப்படும்.

**தன்மை வினைமுற்று :** தன்மைப் பெயரின் தொழிலை உணர்த்தி நிற்பது தன்மை வினைமுற்று ஆகும்.

உ-ம். யான் காண்பன், யான் படித்தேன் — தன்மை ஒருமை வினைமுற்று

யாம் உண்டாம், யாம் சென்றோம் — தன்மைப் பன்மை வினைமுற்று

குறிப்பு : தன்மை வினைமுற்றுக்கள் அன், ஏன்; ஆம், ஓம் என்ற விகுதிகளைப் பெற்றுவரும். (விகுதி—கடைசியில் நிற்கும் உறுப்பு)

**முன்னிலை வினைமுற்று :** முன்னிலைப் பெயரின் தொழிலை உணர்த்தி நிற்பது முன்னிலை வினைமுற்று ஆகும்.

உ-ம். நீ சென்றனை, நீ காண்கின்றாய் — முன்னிலை ஒருமை வினைமுற்று

நீர் உண்டனிர், நீர் படித்தீர், நீங்கள் போமின் — முன்னிலைப் பன்மை வினைமுற்று

குறிப்பு : முன்னிலை வினைமுற்றுக்கள் ஐ, ஆய்; இர், ஈர், மின் என்ற விகுதிகளைப் பெற்று வரும்.

**படர்க்கை வினைமுற்று:** படர்க்கைப் பெயரின் தொழிலை உணர்த்தி நிற்பது படர்க்கை வினைமுற்று ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | முருகன் | வந்தனன் | படர்க்கை ஆண்பால் வினைமுற்று |
| | முருகன் | வந்தான் | |
| | வள்ளி | உண்டனள் | படர்க்கைப் பெண்பால் வினைமுற்று |
| | வள்ளி | உண்டாள் | |
| | பிள்ளைகள் | ஆடுகின்றனர் | படர்க்கைப் பலர் பால் வினைமுற்று |
| | பிள்ளைகள் | ஆடுகின்றார் | |
| | குதிரை | ஓடியது | படர்க்கை ஒன்றன் பால் வினைமுற்று. |
| | குதிரை | ஓடிற்று | |
| | ஆடுகள் | சென்றன | படர்க்கைப் பலவின் பால் வினைமுற்று |
| | ஆடுகள் | செல்லா | |

**குறிப்பு:** படர்க்கை வினைமுற்றுக்கள் அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர்; து, று; அ, ஆ என்ற விகுதிகளைப் பெற்று வரும்.

## பயிற்சி

பின் வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்களைக் கீழ் உள்ள கட்டங்களில் அமைத்து எழுதுக:—

1. பிள்ளைகள் பாடம் படித்தார்கள்.
2. தஞ்சைக்கு எப்பொழுது சென்றனை ?
3. காந்திமதி பின்னல் பின்னுகிறாள்.
4. குமரன் பாட்டுப் பாடுவான்.
5. நாங்கள் சென்னைக்குச் சென்றோம்.
6. மயில் தோட்டத்தில் ஆடியது.
7. நீர் அங்கு எப்பொழுது போவீர்?
8. மரங்கள் அடர்த்தியாய் வளர்கின்றன.
9. அங்குச் சென்று என்ன பார்த்தாய்?
10. கடைக்குச் சென்று புத்தகம் வாங்கினேன்.

| தன்மை வினைமுற்று | முன்னிலை வினைமுற்று | படர்க்கை வினைமுற்று |
|---|---|---|
| | | |

## எச்ச வினை

ஓடின ............ (பையன்) வெற்றி பெற்றான்.
சோம்பேறிகள் வருந்தி .......... (அலைவார்கள்)

இவற்றுள் ஓடின, வருந்தி என்ற வினைகள் பொருள் முடிவுபெறாமல், குறைபாடாய் (எச்சமாய்) நின்று முறையே பையன் என்ற பெயரையும், அலைவார்கள் என்ற வினையையும்கொண்டு முடிந்தன. இவ்வாறு,

பொருள் முடிவுபெறாமல் குறை வினையாய் நிற்கும் வினைச் சொல் எச்ச வினை எனப்படும். (எச்சம்—குறைபாடு).

எச்ச வினை பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

**பெயரெச்சம் :**

வந்த மனிதன் ; தின்ற மாடு ;
வருகிற பையன் ; பாடுகிற பெண் ;
பறக்கும் பறவை ; போகும் சிறுவர்.

இவற்றுள் வந்த, தின்ற, வருகிற, பாடுகிற, பறக்கும், போகும் என்ற எச்ச வினைகள் ஒவ்வொரு பெயரைக் கொண்டு முடிந்து நிற்கின்றன. எனவே இவை பெயரெச்சம் எனப்படும். ஆதலால்,

பெயரைக் கொண்டு முடிந்து நிற்கும் எச்சவினை பெயரெச்சம் ஆகும்.

**வினையெச்சம் :**

வந்து பாடினான் ; ஆடச் சென்றாள் ;
கூடி நிற்கின்றன ; பாடி மகிழ்கிறார்கள் ;
ஓடித் திரியும் ; மகிழ்ந்து வருவான்.

இவற்றுள் வந்து, ஆட, கூடி, பாடி, ஓடி, மகிழ்ந்து என்ற எச்சவினைகள் ஒவ்வொரு வினையைக் கொண்டு முடிகின்றன. எனவே இவை வினையெச்சம் எனப்படும்.

வினையைக் கொண்டு முடிந்து நிற்கும் எச்சவினை வினையெச்சம் ஆகும்.

225